# கனடா பிரதமருடன் பிரதமர் மோடி சந்திப்பு

செப்டம்பர் 10, 2023

பிரதமர் திரு நரேந்திரமோடி கனடா பிரதமர் திரு ஜஸ்டின் ட்ரூடோவை செப்டம்பர் 10 அன்று புதுதில்லியில் ஜி20 உச்சிமாநாட்டின் இடையே சந்தித்துப் பேசினார்.

இந்தியாவின் ஜி20 தலைமை வெற்றி பெற்றதற்கு பிரதமர் மோடிக்கு பிரதமர் ட்ரூடோ வாழ்த்து தெரிவித்தார்.

இந்தியா-கனடா உறவுகள் பகிரப்பட்ட ஜனநாயக விழுமியங்கள், சட்டத்தின் ஆட்சிக்கு மரியாதை மற்றும் வலுவான மக்களிடையேயான உறவுகளில் தொகுக்கப்பட்டுள்ளன என்பதை பிரதமர் எடுத்துரைத்தார். கனடாவில் தீவிரவாத சக்திகளின் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்வது குறித்து இந்தியாவின் வலுவான கவலைகளை அவர் தெரிவித்தார். அவர்கள் பிரிவினைவாதத்தை ஊக்குவித்தல் மற்றும் இந்திய தூதர்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டுதல், இந்திய தூதரக வளாகங்களை சேதப்படுத்துதல் மற்றும் கனடாவில் உள்ள இந்திய சமூகத்தையும் அவர்களின் வழிபாட்டுத் தலங்களையும் அச்சுறுத்துவதையும் குறிப்பிட்டார். ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள், போதைப்பொருள் சிண்டிகேட்கள் மற்றும் மனித கடத்தல் ஆகியவற்றுடன் இத்தகைய சக்திகளின் தொடர்பு கனடாவிற்கும் கவலையாக இருக்க வேண்டும் என்றும், இதுபோன்ற அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள இரு நாடுகளும் ஒத்துழைப்பது அவசியம் என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

இந்தியா-கனடா உறவின் முன்னேற்றத்திற்கு பரஸ்பர மரியாதை மற்றும் நம்பிக்கை அடிப்படையிலான உறவு அவசியம் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

**புது தில்லி**
**செப்டம்பர் 10, 2023**